**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.300/2018**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : லலித்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : அன்பரசன் | **Calling** | : | நூலகர் |
| **Village** | : குஜிலியம்பாறை | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | 37/2025 |
| | | **Dated** | : | 19.11.2025 |

**19.11.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 **திரு.லலித்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 6** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் குஜிலியம்பாறையில் குடியிருந்து நூலகத்தில் நூலக பணியாளராக பணிபுரிந்துவருகிறேன். நான் கடந்த 2015ம் வருடம் குஜிலியம்பாறையில் உள்ள கொச மற்றும் பைனான்சில் எனக்கு சொந்தமான நகைகளை அடகுவைத்து பணம் பெற்றிருந்தேன். சில நாட்களிலேயே பணத்தை செலுத்தி எனது நகையைப் பெற்றுக்கொண்டேன். எதிரி குஜிலியம்பாறையில் உள்ள கொச மற்றும் பைனான்சில் நான் நகை அடகு வைக்கும்போது மேனேஜராக வேலை செய்துவந்தார். நான் நகை திருப்பும்போது கொச மற்றும் பைனான்சில் எதிரி வேலையில் இல்லை. நான் கடந்த ஆண்டு வரை வாடிக்கையாளராக

தொடர்ந்து இருந்தேன். நிறுவனத்தில் நடந்த போலி நகைகள் பற்றி எனக்கு தெரியாது.

**<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 23.03.2015ம் தேதி கொச மற்றும் குஜிலியம்பாறை பைனான்ஸ் கிளையில் 18 கிராம் எடை உள்ள தங்க நகைகளை ரூ.30,700/- க்கு அடகு வைத்து கடனாக வாங்கியிருக்கிறேன். அப்போது எதிரி மேனேஜராக பணி புரிந்தார் என்றும் நிறுவனத்தில் போலி நகைகளை மாற்றி மோசடி செய்ததால் எனது நகைகள் அதில் மாட்டிக்கொண்டது என்றும் எனது நகைகள் தற்போதுவரை எனக்கு கிடைக்கவில்லை என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்து தற்சமயம் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.11.19 12:55:55 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.300/2018**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சுந்தராஜ் | **Caste** | : | |
| **Father's Name** | : | தங்கராஜ் | **Calling** | : | ஆட்டோ ஓட்டுனர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | திருச்சி | **Age** | : | **36/2025** |
| | | | **Dated** | : | **19.11.2025** |

**19.11.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–10 **திரு.சுந்தராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 7** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருச்சியில் குடியிருந்து ஆட்டோ டிரைவராக வேலை செய்துவருகிறேன். கடந்த 2015ம் வருடம் குஜிலியம்பாறை அருகில் உள்ள பண்ணைப்பட்டியில் வாழ்ந்துவந்தேன். நான் கடந்த 2015ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை குஜிலியம்பாறையில் உள்ள கொச மற்றும் பைனான்சில் எனக்கு சொந்தமான 3 பவுன் எடை உள்ள நகைகளை அடகுவைத்து ரூ.40,000/-க்கு மேல் பணம் பெற்றிருந்தேன். 6 மாதம் கழித்து நகை திருப்புவதற்காக வந்தபோது என்னிடம் பைனான்சில் கொடுத்த அடகு ரசீது காணாமல் போய்விட்டது. பைனான்சில் போய் கேட்டதற்கு எனது பெயரில் நகை இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

நான் நகையை அடகு வைக்கச்சென்றபோதும் நகையைத்திருப்பச் சென்ற போதும் யார் பணியில் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு நினைவில் இல்லை. நிறுவனத்தில் போலி நகை தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 28.03.2015ம் தேதி கொச மற்றும் குஜிலியம்பாறை பைனான்ஸ் கிளையில் 23.3 கிராம் எடை உள்ள தங்க நகைகளை ரூ.44,100/- க்கு அடகு வைத்து கடனாக வாங்கியிருக்கிறேன். அப்போது எதிரி மேனேஜராக பணி புரிந்தார் என்றும் நிறுவனத்தில் போலி நகைகளை மாற்றி மோசடி செய்ததால் எனது நகைகள் அதில் மாட்டிக்கொண்டது என்றும் எனது நகைகள் தற்போதுவரை எனக்கு கிடைக்கவில்லை என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்து தற்சமயம் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.11.19 12:56:02 +0530

Judicial Magistrate No.II
Dindigul.